**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 96/2021**

**Deposition of Witnesses for PW 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு .சரவணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.11.2025

**எதிரி PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அறந்தாங்கி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2019ம் தேதி அறந்தாங்கி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் சிவக்குமார் அவர்கள், அறந்தாங்கி விஏஓ, கும்மங்காடு வட்டம் வந்து ரகசிய தகவல் சொன்னதன் பேரில், 6.20 மணிக்கு முத்துக்குமார் மற்றும் நான், விஏஓ மோகன், ஆகியோர் எம்.ஜி.ஆர் நகர் சென்றபோது, அங்கு கஞ்சா விற்பதாக விஏஓ அடையாளம் காண்ப்பித்தார். பின்னர் பெயர், விலாசம் தெரிந்த முருகன், வயது 62, த/பெ.சிவசாமி செட்டியார், எம்.ஜி.ஆர்.நகர், என்பவர் அவர் வீட்டின் கருவேளமரத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். எதிரியை விஏஓ அடையாளம் காண்பித்தார். உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து உங்களை சோதனை செய்ய வேண்டும் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியின் முன்போ அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டதற்கு தேவையில்லை நீங்களே சோதனை செய்யலாம் என்றுசொன்னதன் பேரில், அவர் பக்கத்தில் ஸ்கூட்டி வேகோ புளூ கலர் டி.என்.55 AT 7869 என்ற இருசக்கர வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு மூட்டை இருந்தது. அதனை பிரித்து பார்த்தபோது இலை, பூவுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 5 கிகி கஞ்சா இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து தீயிட்டு பார்த்தபோது கஞ்சா வாடை வீசியது. பின்னர் அவரிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பெற்றோம். அவர் கஞ்சா விற்பதாக ஒப்புக்கொண்டார். பின்னர் சோதனைக்காக தலா 100 கிராம் வீதம் 2 பொட்டலங்கள் பகுப்பாய்விற்காக எடுத்து, சாம்பில் கஞ்சாவில் நான் மற்றும் முத்துக்குமார், எதிரியும் கையொப்பம் செய்தார்.வழக்கு சொத்தை மகஜரில் கைப்பற்றினார் அதில் நானும் **விஏஓ** கையொப்பம் செய்தோம், அந்த மகஜர்

ஏற்கனவே அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 4.800 கிகி கஞ்சாவை எடுத்துக்கொண்டு வழக்கு பதிவு செய்தோம். பின்பு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 19.03.2019 ம் தேதி 8.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் மகஜரில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே மகஜரில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை எங்கு வைத்து யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். எத்தனை மணிக்கு எங்கு வைத்து யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் காவல் ஆய்வாளர் 19.03 .2021 ம் தேதி எதிரியின் வீட்டின் அருகே மடிக்கணினி மூலமாக தட்டச்சு செய்தார். இந்த விபரம் எங்கள் VAO க்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் எதிரியின் வீட்டின் முன்புக்கு வைத்து மடிக்கணினியில் ஆய்வாளர் அந்த ஆவணங்களை தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து காவல் துறை யினர் தயார் செய்த ஆவணங்களில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என்னை சம்பவ இடத்திற்கு வரசொன்னது யார் என்றால் நாங்கள் எதிரி கஞ்சா விற்பதை அறிந்து தகவல் கொடுத்தோம் போலீசார் வருவது தெரிந்து நாங்களும் அந்த இடத்திற்கு சென்றோம். கையொப்பம் செய்த போது மணி என்ன இருக்கும் என்றால் காலை 7.45 மணி இருக்கும். மாதிரிக்கு எடுத்த பொட்டலங்கள், சாக்குபையை கைப்பற்றிய வகைக்கு நானும் VAO மோகன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கையொப்பம் சுமார் காலை 7.45–8.00 மணி வரை இருக்கும் . அதில் குற்ற எண் 246/2021 மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்ற பிறகு முதல் தகவல் அறிக்கை போடப்பட்டது என்றால் சரிதான். பொட்டலங்கள் மற்றும் இருசக்கர வாகனம் யாரால் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் காவல் துறையினரால் எடுக்கப்பட்டது . இந்த

விபரத்தை எனது விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த புகைப்படங்கள் எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்றால் எதிரியின் வீட்டின் வாசலில் இருந்து எடுக்கப்பட்டது. எதிரியின் வீட்டின் முன்பக்க தூண் என்ன கலரில் உள்ளது என்றால் வெள்ளை கலரில் இருந்தது. எதிரியின் வீட்டின் முன்பகுதியில் பெரிய கேட் உள்ளதா என்றால் இல்லை.என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இருசக்கர வாகனத்தின் புகைப்படத்தில் கண்டுள்ள இடம் காவல் நிலைய முன்பக்கம் என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்கள் மற்றும் மூட்டைகள் புகைப்படம் எடுக்கப்பட்டது. காவல் நிலைய Table லில் என்றால் சரிதான். நானும் VAO மோகனும் காவல் நிலையம் சென்று விட்டு எனது பைக்கில் சம்பவ இடத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். போலீசார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 3 பேர் வந்தார்கள். அவர்கள் எத்தனை பைக்கில் வந்தார்கள் என்றால் 2 பைக்கிள் வந்தார்கள். கஞ்சா வை உறுதி செய்வதற்கு அதில் சிறிதளவு எடுத்து யார் கொளுத்தி பார்த்தது என்றால் சார்பு ஆய்வாளர் கொளுத்தி பார்த்தார். அவரின் பெயர் தற்போது ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை . எத்தனை கிராம் எடுத்து எத்தனை முறை கொளுத்தி பார்த்தது என்றால் சிறிதளவு எடுத்து ஒரு முறை மட்டும் கொளுத்தி பார்க்கப்பட்டது. அப்போது VAO அங்கு எங்களோடு இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் கஞ்சாவை கொளுத்தி பார்க்கவில்லை என்றும் நானும் , VAO வும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சாக்கு பையின் நிறம் என்னவென்றால் வெள்ளை நிறம் ஆகும். அந்த வெள்ளை நிற சாக்கு பையில் என்ன Print Out எழுதப்பட்டிருந்தது என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. நான் அந்த சாக்கு பையை கண்ணால் பார்க்கவில்லை என்றும் புகைப்படத்தில் மட்டுமே பார்த்தேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுத்தாக சொல்வது பற்றி அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் எந்த வகையான எடை தராசை கொண்டு வந்தார்கள் என்றும் எடை கற்களை கொண்டு வந்தார்கள் என்றும் நான் எனது விசாணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சான்று பொருள்களை எத்தனை முறை யாரால் எடை போடப்பட்டது என்றால் சாக்குபையை தராசில் எடை வைத்தது நான் தான். அப்போது VAO மோகன் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும்

நான் எடை போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாணை செய்த போலீசார் காவல் ஆய்வாளராக அல்லது காவல் உதவி ஆய்வாளரா என்றால் காவல் உதவி ஆய்வாளர். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனக்கு எந்த வித தகவலும் வரவில்லை என்றும் காவல் நிலையத்திற்கோ சம்பவ இடத்திற்கோ நான் செல்லவில்லை என்றும் போலீசாரால் ஏற்கனவே தயார் செய்த ஆவணங்களில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து என் முன்னிலையில் எந்த தடய சொத்தும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 96/2021**

**Deposition of Witnesses for PW 4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு .முத்துக்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.11.2025

**எதிரி PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2019ம் தேதி அறந்தாங்கி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் சிவக்குமார் அவர்கள், அறந்தாங்கி விஏஓ, கும்மங்காடு வட்டம் வந்து ரகசிய தகவல் சொன்னதன் பேரில், 6.20 மணிக்கு குணசீலன் மற்றும் நான், விஏஓ மோகன், கிராம உதவியாளர் சரவணன் ஆகியோர் எம்.ஜி.ஆர் நகர் சென்றபோது, அங்கு கஞ்சா விற்பதாக விஏஓ அடையாளம் காண்ப்பித்தார். பின்னர் பெயர், விலாசம் தெரிந்த முருகன், வயது 62, த/பெ.சிவசாமி செட்டியார், எம்.ஜி.ஆர்.நகர், என்பவர் அவர் வீட்டின் கருவேளமரத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். எதிரியை விஏஓ அடையாளம் காண்பித்தார். உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து உங்களை சோதனை செய்ய வேண்டும் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியின் முன்போ அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டதற்கு தேவையில்லை நீங்களே சோதனை செய்யலாம் என்றுசொன்னதன் பேரில், அவர் பக்கத்தில் ஸ்கூட்டி வேகோ புளூ கலர் டி.என்.55 AT 7869 என்ற இருசக்கர வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு மூட்டை இருந்தது. அதனை பிரித்து பார்த்தபோது இலை, பூவுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 5 கிகி கஞ்சா இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து தீயிட்டு பார்த்தபோது கஞ்சா வாடை வீசியது. பின்னர் அவரிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பெற்றோம். அவர் கஞ்சா விற்பதாக ஒப்புக்கொண்டார். பின்னர் சோதனைக்காக தலா 100 கிராம் வீதம் 2 பொட்டலங்கள் பகுப்பாய்விற்காக எடுத்து, சாம்பில் கஞ்சாவில் நான் மற்றும் குணசீலன், எதிரியும் கையொப்பம் செய்தார். மீதமுள்ள 4.800 கிகி கஞ்சாவை எடுத்துக்கொண்டு வழக்கு பதிவு செய்தோம். பின்பு

வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 19.03.2019 ம் தேதி 8.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் ஆய்வாளர் விசாரணையின் போது சொன்னேன் என்றால் சரிதான். அறந்தாங்கி காவல் நிலையத்தில் நான் எத்தனை வருடம் பணிபுரிந்தேன். என்றால் 3 வருடம் பணிபுரிந்தேன். VAO க்கு தகவல் கொடுத்த பின் ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்றால் ஆய்வாளர் இல்லை. மொத்தம் எத்தனை போலீசார் எத்தனை வாகனத்தில் சென்றோம் என்றால் 3 பேர் 2 இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான்கு சக்கர வாகனத்தில் யாரும் சென்றீர்களா என்றால் செல்லவில்லை. நான் இந்த வழக்கில் எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். மாதிரி பொட்டலங்களில் உள்ள விபர சீலிப்களில் சாட்சி கையொப்பம் செய்தீர்களா என்றால் செய்தேன். அவ்வாறு நான் எந்த கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமும், சாட்சிகளிடமும் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் வாங்கப்பட்டது. அப்போது நேரம் என்ன என்றால் காலை 645–7.45 மணி ஆகும். ஆய்வுக்காக தீயிட்டு கொளுத்தி பார்த்த விபரம் எனக்கு தெரியுமா கொளுத்தி பார்த்தது தெரியும் ஆனால் அந்த கொளுத்தி பார்த்த கஞ்சாவின்எடை அளவு எனக்கு தெரியாது . சம்பவ இடத்தில் கொளுத்தி பார்க்கவில்லை என்றும் அவ்வாறு கொளுத்தி பார்த்திருந்தால் அதன் எடையை சொல்லமுடியும் என்றால் சரியல்ல. VAO, உதவியாளர், காவலர்கள் அனைவரிடமும் புகைப்படம் எடுக்ககூடிய செல்போன் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியை நிற்க வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் SI Sir எடுத்தார். அவ்வாறு புகைப்படம் எடுத்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வைத்து யாரால் எத்தனை மணிக்கு ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எதிரியின் வீட்டின் அருகில் கையால் எழுதப்பட்டது .காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் வரவில்லை என்றும் நான் ரைடுக்கு உடன் செல்லவில்லை என்றும் எந்த ஆவணத்திலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றும் நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் உயர்

அதிகாரி கேட்டு கொண்ட வகைக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து என் முன்னிலையில் எந்த தடய சொத்தும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.